முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.06.2025) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப்பைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தருமபுர ஆதீனம் தவத்திரு மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல தேசிக அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீஎம்பார் ஜீயர் மடம் ஸ்ரீ அப்பன் உலகாரிய இராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் தவத்திரு சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், மருத்துவர் நா. எழிலன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் சு.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி சி.ஹரிப்ரியா, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் நே.சிற்றரசு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.06.2025) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப்பைகளை வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.06.2025) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர்கள் பணிகள் குறித்த கூட்டம்!

சாலையின் தரத்தினை பல்வேறு கட்டங்களில் தரக்கட்டுப்பாடு ஆய்வு செய்ய வேண்டும்!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவுரை!

சென்னை, ஜூன் 28-

நெடுஞ்சாலைத்துறையின் தலைமைப் பொறியாளர்களின் பணிகள் தொடர்பாக. பொதுப்பணிகள், நெஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆய்வு செய்து சில அறிவுரைகள் வழங்கினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில், நேற்று (27.06.2025) பொதுப்பணிகள், நெஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர்களின் பணிகள் குறித்து ஆய்வு செய்து சில அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறையைச் சார்ந்த அனைத்து தலைமைப் பொறியாளர்களும் கலந்து கொண்டனர். தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கோட்டப் பொறியாளர்களுடன் தலைமையிடத்தில் மாதம் ஒருமுறை பணி முன்னேற்றம், விரிவானத் திட்ட அறிக்கை தயாரிக்கும் கோப்புகள், நிலஎடுப்பு, நீதிமன்ற வழக்குகள் போன்ற முக்கியப் பணிகளை ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

தலைமைப் பொறியாளர்கள் ஆய்வு கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக, கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள், உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களுடன், கண்காணிப்புப் பொறியாளர்கள் ஆய்வு நடத்த வேண்டும். அதேபோன்று, கோட்டப் பொறியாளர்களும் சம்மந்தப்பட்ட களப்பொறியாளர்களுடன் தணிக்கை நாள் ஆய்வுக் கூட்டம் நடத்த வேண்டும். இதனை கண்காணிப்புப் பொறியாளர்கள் ஆய்வு நடைபெறுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேலும், தலைமைப் பொறியாளர் ஒரு மாதத்தில், குறைந்தப் பட்சம் 10 நாட்களுக்கு களஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டார்.

வேலை தளத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதாவது, சாலைகள் குறுக்கே பாலங்கள் கட்டும்போது, போதிய தடுப்புகள் (Barricades) வலிமையாக அமைக்கப்பட வேண்டும். இரவில், ஒளிரும் ஸ்ட்டிக்கர்(Sticker) மற்றும் ஒளிரும் பிரிதிபலிப்புப் பாதைகைகள் வைக்கப்பட வேண்டும். கவனக் குறைவு மற்றும் கடமையில் அலட்சியமாக செயல்பட்டால், சம்மந்தப்பட்ட பொறியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

சாலையின் தரத்தினை பல்வேறு கட்டங்களில், தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், முத்திரைத் திட்டங்கள் (Iconic Scheme) குறித்து, 15 நாட்களுக்கு ஒருமுறை அரசுக்கும், செயலாளர் அவர்களுக்கும் பணியின் முன் னேற்ற அறிக்கையினை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை வரை உயர்மட்டப் பாலம், மதுரை அப்போலா பாலம், மதுரை இராஜாஜி சந்திப்பு அருகே பாலம் போன்ற முக்கியமான பணிகளை தனிக் கவனம் செலுத்தி விரைந்து முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

புறவழிச் சாலைகள் அமைக்க அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டும், சில புறவழிச்சாலைப் பணிகள் நிறைவுபெறாமல் உள்ளது. இதில், தலைமைப் பொறியாளர்கள் உரிய கவனம் செலுத்தவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

சாலை உபகரணங்கள், IRC விதி முறைகளுக்கு ட்பட்டு, தேவையான இடங்களில் மட்டும் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்திய அமைச்சர் அவர்கள், சாலை இருபுறமும் படர்ந்துள்ள முட்புதர்களை அகற்ற வேண்டுமென்றும், பள்ளமில்லா சாலைகளாகப் பராமரிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

சாலையில் மையத் தடுப்பான்(Center Median) அருகே மண் குவியல்கள் உடனுக்குடன் அகற்றப்பட்டு, நடைமேடையில் ஏதேனும் குறையிருந்தால் அவ்வப்போது பார்வையிட்டு, சீரமைக்கப்பட வேண்டும். இப்பணிகள் அனைத்தும் 30.7.2025க்குள் முடிக்கப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ் பங்குப் பெற்றார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில் - முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா!

திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கி மாபெரும் பேரணி!

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைக்கின்றனர்!

தாம்பரம், ஜூன் 28-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனைகள் விளக்க மாபெரும் பேரணி நாளை (29.6.2025-ஞாயிற்றுக்கிழமை) காலை 7.00 மணியளவில் மேற்கு தாம்பரம் பாபு மகப்பேரு மருத்துவமனை அருகில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் பேரணிக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மருத்துவ அணித் தலைவர் ஆர்.எஸ்.கிருத்திகாதேவி தலைமை வகிக்கிறார்.

டி.காமராஜ், எஸ்.இந்திரன், கோல்டு டி.பிரகாஷ், முனைவர் எல்.பிரபு, டி.பி.செந்தில்குமார், வி.ரவிச்சந்திரன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

பி.ஆகாஷ், கே.சபரி ராஜா, ஆர்.பவித்ரா, புகழ் முருகன், பாபு, டி.அன்பழகன், எஸ்.வேல்விழிவேந்தன், ஆர்.ஓவியா முருகன், மஞ்சு சுபாஷினி, எம்.நரசிம்மன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் - நாடாளுமன்ற மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்துகொண்டு கழகக் கொடியினை ஏற்றி வைத்து பேரணியை துவக்கி வைக்கின்றனர்.

இப்பேரணியில் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி., எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, மீ.அ.வைதியலிங்கம், இ.கருணாநிதி எம்.எல்.ஏ. , வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., த.துரைசாமி, து.மூர்த்தி, வெ.விசுவநாதன், வீ.தமிழ்மணி, ஜி.சி.அன்புச்செல்வன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், படப்பை ஆ.மனோகரன், கோ.காமராஜ், செம்பருத்தி துர்கேஷ், அ.தமிழ்மாறன், ஆர்.டி.அரசு, பி.டி.சி. செல்வராஜ், இரா.பொன்ராம், என்.நவீன், சாய் ஜெய் காந்த் பாரதி, வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயகுமார், எஸ். சேகர், ஆ.நடராஜன், ஆர். சுரேஷ், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், என்.சந்திரன், ப.குணாளன் உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர்.

நிறைவாக விக்கி (எ) விக்னேஸ்வரன், ச.ராஜேஷ், ஜி.கே.அரவிந்த்ராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சிறப்பாக செய்துள்ளது.

பரணிபுத்தூரில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்தாலோசனை கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான ஆ.இராசா பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினார். அருகில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு., எம்.பி., கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், ஆலந்தூர் தொகுதி பார்வையாளர் பத்மப்ரியா மற்றும் ஒன்றிய நகர பகுதி செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆகியோர் உள்ளனர்.

மயிலை மேற்குப் பகுதி தகவல் தொழில்நுட்ப அணி கூட்டம்!

நந்தனம் கி.மதி தலைமை! சி.எச்.சேகர் – கோ.வி. லெனின் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 28-

மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி. தலைமையில் ஜி. ஆர்.ராஜேந்திரன் , அசோக்குமார், பா.பாக்கியதாஸ், ஜி. முருகையன், வட்டச் செயலாளர்கள் டி.ராஜவேலு, சி.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜா, சுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.ராஜேந்திரன் வரவேற்பில் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ரா.கதிரவன் , தொகுதி அமைப்பாளர் வி.கார்த்திக் , மயிலை மேற்கு பகுதி அமைப்பாளர் தி.லோகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் மயிலை மேற்குப் பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் இன்று (28.06.2025 சனிக்கிழமை) மாலை 5.30 மணியளவில் பாரதிதாசன் சாலையில் உள்ள சமூக நலக்கூடம் தேனாம்பேட்டையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு தகவல் தொழில்நுட்ப அணி வட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி,பாக முகவர்கள் (BLA2), ஒவ்வொரு பாகதிற்குட்பட்ட தகவல் தொழில்நுட்ப பாக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இக்கூட்டத்தில் மயிலை தொகுதி பொறுப்பாளர் கோ.வி.லெனின், மண்டல பொறுப்பாளர் சி.எச். சேகர் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்கள்.

அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அமெரிக்காவின் கான்சாஸ் மாகாணத்தில் அமைந்துள்ள கான்செஸ் மாநில வேளாண் பல்கலைக்கழகத்தில் கான்சாஸ் மாகாண வேளாண் துறை செயலாளர், மாகாணத்தின் ஏற்றுமதி இயக்குநர், பல்கலைக்கழகத்தின் வேளாண் துறை பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து பூச்சி நோய் தாக்குதல் மேலாண்மை, வேளாண் பொருட்கள் மதிப்பு கூட்டுதல், செயற்கை நுண்ணறிவு மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் முறைகள், ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் இங்கு கடைப்பிடிக்கப்படும் சிறந்த நடைமுறைகள் குறித்து கலந்துரையாடினார். உடன் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி. குமரவேல் பாண்டியன், உடன் இருந்தார்.